யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்ட இளைஞர் வன்னியில் இருந்து தப்பி வந்தார்

செய்தி

### துப்பாக்கிப் பயன்பாடுகளை தாம் நிறுத்தப் போவதாக விடுதலைப்புலிகள் முடிவு: புலிகளின் பேச்சாளர் செ.பத்மநாதன்

[ ஞாயிற்றுக்கிழமை, 17 மே 2009, 10:48.34 AM GMT +05:30 ]

வன்னியில் உள்ள ஆயிரக்கணக்கான மக்களை மரணத்தின் பிடியில் இருந்து பாதுகாக்குமாறு உலகத்தை நாம் கேட்டுக்கொண்ட போதிலும் அனைத்துலக சமூகத்தின் மௌனம்தான் சிறிலங்கா இராணுவம் தனது இராணுவ நடவடிக்கையை முன்னெடுக்க ஊக்குவித்தது கசப்பான முடிவுக்கே கொண்டு சென்றுள்ளது என தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அனைத்துலக விவகாரங்களுக்கான பொறுப்பாளர் செ.பத்மநாதன் தெரிவித்திருக்கின்றார்.

கடந்த 24 மணி நேரத்தில் 3 ஆயிரம் மக்கள் வீதிகளில் கொல்லப்பட்டிருக்கும் அதேவேளையில் கடுமையாக காயமடைந்த 25 ஆயிரம் பேர் மருத்துவ பராமரிப்புக்கள் எதுவும் இல்லாமல் அங்குள்ளார்கள். எமது மக்களைப் பாதுகாப்பதே இப்போதுள்ள அவசரமான பணியாகும் எனவும் அவர் இன்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள அவசர அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இதனைக் கவனத்திற்கொண்டு எமது மக்களைப் பாதுகாப்பதற்காக எமது துப்பாக்கிகளை மௌனமாக வைத்திருப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம் என்ற எமது நிலைப்பாட்டை உலகத்துக்கு நாம் ஏற்கனவே அறிவித்திருக்கின்றோம் எனவும் இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கும் பத்மநாதன் மேலும் முக்கியமாகத் தெரிவித்திருப்பதாவது:

சிறிலங்காவின் ஆயுதப் படையினரால் எமது மக்கள் ஈவிரக்கம் இன்றிப் படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்துமாறு உலகத்தில் உள்ள நாடுகளை நாம் கேட்டுக்கொண்டிருந்தோம். ஆனால், எமது இந்தக் கோரிக்கை யாருடைய காதிலும் விழவில்லை.

போர் இடம்பெறும் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட தமிழர்களைப் பாதுகாப்பதற்கும் இராணுவத்தினரிடம் சரணடைந்த போராளிகள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் உடனடியாக எடுக்குமாறு அனைத்துலக சமூகத்தை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த போர் கசப்பான ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றது. எமது மக்களின் முடிவில்லாத ஆதரவையும் உதவியையும் தவிர எமக்கு எந்த உதவியும் இல்லாத நிலையில் சிங்களப் படையினர் முன்னேறியபோது நாம் பின்வாங்க வேண்டியேற்பட்டது.

எமது மக்கள்தான் இப்போது குண்டுகளாலும் எறிகணைகளாலும் நோய்களாலும் பட்டினியாலும் மரணமடைந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் மேலும் பாதிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது.

எம்மிடம் இப்போது கடைசியாக ஒரே தெரிவுதான் இருக்கின்றது. எமது துப்பாக்கிகளை மௌனிக்கச் செய்வதற்கு நாம் தீர்மானித்திருக்கின்றோம். எமது அப்பாவி மக்களுடைய இரத்தம் தொடர்ந்தும் சிந்தப்படுவதை எம்மால் சகித்துக்கொள்ள முடியாது.

விடுதலைப் புலிகள் அமைப்பானது கடந்த மூன்று தசாப்த காலமாக சிறிலங்கா இராணுவத்துடன் போரிட்டு, இந்தத் தீவில் வசிக்கும் தமிழர்களைப் பாதுகாப்பதற்காக ஆயுதங்களை வைத்திருப்பதற்கான உரிமையைப் பெற்றிருந்தது. 2002 ஆம் ஆண்டு நோர்வேயின் அனுசரணையுடன் தொடங்கிய சமாதான முயற்சிகளில் இருந்து ஒரு தலைப்பட்சமாக வெளியேறிய பின்னர், இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு சிறிலங்கா அரசாங்கம் இராணுவத் தீர்வை நாடியது.

2007 ஆம் ஆண்டில் போர் தீவிரமடைந்த பின்னர் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் மரணமடைந்திருக்கின்றனர். வடபகுதியில் இராணுவம் தனது நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியதையடுத்து பெருமளவு தமிழர்கள் கொல்லப்பட்டதுடன், பட்டினியாலும், போதிய மருத்துவ வசதிகள் இல்லாமையாலும் மேலும் பலர் மரணமடைந்திருக்கின்றனர்.

"இந்தக் கொடூர நிகழ்வுகளை நிறுத்துவதற்கு எமது வரையறைக்கு உட்பட்ட எதனையும் செய்வதற்கு நாம் தயாராகவுள்ளோம். இது எமது ஆயுதங்களை மௌனிக்கச் செய்வதுடன், சமாதான நடைமுறைக்குள் பிரவேசிப்பதாக இருந்தாலும் அவற்றுக்கு நாம் ஏற்கனவே இணக்கம் தெரிவித்திருக்கின்றோம்.

இன்றைய தருணத்தில் இதுதான் தேவை. இதன் மூலமாக ஆயிரக்கணக்கான மக்களுடைய உயிர்களைப் பாதுகாக்க முடியுமாயின் அது செய்யப்பட வேண்டும்.

எமது மக்களுக்காகத்தான் நாம் போராடுகின்றோம் என்பதை நாம் மறந்துவிடவில்லை. தற்போதைய நிலைமைகளின் அடிப்படையில், எமது மக்கள் கொல்லப்படுவதை நியாயப்படுத்துவதற்கு இந்த போரை சிங்கள அரசு பயன்படுத்துவதை இனிமேலும் அனுமதிக்க முடியாது.

நாம் எமது துப்பாக்கிகளை மௌனிப்பதற்கு தயாராவிருக்கின்றோம். எமது மக்களைப் பாதுகாக்குமாறு அனைத்துலக சமூகத்திடம் தொடர்ந்தும் கோருவதைவிட எம்மிடம் வேறு தெரிவுகள் எதுவும் இல்லை."

இவ்வாறு பத்மநாதன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இன்றைய செய்தி - 10, மே 2010 திங்கட்கிழமை
ஞாயிற்றுக்கிழமை | சனிக்கிழமை | வெள்ளிக்கிழமை
வியாழக்கிழமை | புதன்கிழமை | செவ்வாய்க்கிழமை

sponsor




advertisements













#### சிறப்புச் செய்திகள்

**ஐ.நா. நிபுணர்கள் குழு அமைக்கும் பணிகள் மும்முரமாக நடைபெறுகின்றது : மார்டி நெசர்ஸ்கீ**

[ ஞாயிற்றுக்கிழமை, 09 மே 2010, 04:56.44 AM ]



இலங்கை போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு ஆலோசனை வழங்கும் நிபுணர்கள் குழுவோன்றை அமைக்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருவதாக அமைப்பின் பேச்சாளர் மார்டி நெசர்ஸ்கீ தெரிவித்துள்ளார். [மேலும்]


**நாடு கடந்த ஈழ இராச்சிய பிரதிநிதிகள் கறுப்புப் பட்டியலில் சேர்ப்பு : திவயின**

[ ஞாயிற்றுக்கிழமை, 09 மே 2010, 04:44.20 AM ]

நாடு கடந்த தமிழீழ இராச்சியத்தின் பிரதிநிதிகளை இலங்கை அராங்கம் கறுப்புப் பட்டியலில் இட்டுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. [மேலும்]

**பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட திஸ்ஸநாயகம் எங்கே?**


[ ஞாயிற்றுக்கிழமை, 09 மே 2010, 02:59.02 AM ]



ஜனாதிபதியினால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட ஊடகவியலாளர் ஜே எஸ் திஸ்ஸநாயகம், எங்கிருக்கிறார் என்பது தெரியவில்லை என அவரின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். [மேலும்]

**மாணவியை வல்லுறவுக்குட்படுத்திய சந்தேக நபர் விளக்க மறியலில்**

[ ஞாயிற்றுக்கிழமை, 09 மே 2010, 02:22.34 AM ]



மன்னாரில் மாணவியை அழைத்து வந்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகக் கருதப்படும் சந்தேக நபரையும் அவருடைய செயலுக்கு உடந்தையாக இருந்ததாகக் கருதப்படும் சந்தேக நபரையும் இரண்டு வார காலத்திற்கு விளக்க மறியலில் வைக்கும்படி மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தினால் கட்டளையிடப்பட்டுள்ளது [மேலும்]

**மே 17ம் திகதியை துக்க நாளாக அனுஷ்டிக்குமாறு த.தே.கூட்டமைப்பு கோரிக்கை**

[ ஞாயிற்றுக்கிழமை, 09 மே 2010, 01:58.56 AM ]



வருடாந்தம் மே 17 ஆம் திகதியை துக்க தினமாக கடைப்பிடிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களைக் கோரியுள்ளது. [மேலும்]